தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். ஏ. சோமசுந்தரம் Ph.D.,
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 31-10-2016

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## பூரத்தி பழங்குடி விவசாயிகளுக்கு நூற்புழு மேலாண்மைப் பயிற்சி

அகில இந்திய ஒருங்கிணைந்த நூற்புழு ஆய்வுத் திட்டத்தின்கீழ் சாடிவயல் பூரத்தியில் வாழும் பழங்குடியினருக்கு நூற்புழு மேலாண்மை குறித்த பயிற்சி 25-10-2016 செவ்வாய்கிழமையன்று வழங்கப்பட்டது.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக நூற்புழுவியல் துறை சார்பில் நடந்த இந்நிகழ்ச்சியில், அகில இந்திய நூற்புழு ஆய்வுத்திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர். இராமன் குமார் வாலியா தலைமையில், பல்கலைக்கழகப் பயிர் பாதுகாப்பு மைய இயக்குநர் முனைவர். கு. இராமராசு அவர்கள் முன்னிலையில் நடைபெற்றது. இதில் இராசயன நூற்புழு கொல்லிகளைத் தவிர்த்து, பாதுகாப்பான உயிரியல் நூற்புழு கொல்லிகளை பயன்படுத்துவதன் முக்கியத்துவம் குறித்து முனைவர் கு. இராமராசு எடுத்துரைத்தார்.

நூற்புழு விஞ்ஞானிகளான முனைவர் ப. கலையரசன் மற்றும் முனைவர் சுவர்ணகுமாரி ஆகியோர் பயிர்களில் நூற்புழுத் தாக்குவதால் ஏற்படும் அறிகுறிகளையும், உயிரியல் நூற்புழுக் கொல்லிகளை எவ்வாறு பயன்படுத்த வேண்டும் என்பதனையும் எடுத்துக் கூறினர். மேலும் நுண்ணோக்கி மூலம் நூற்புழுக்கள் பழங்குடியின விவசாயிகளுக்கு காண்பிக்கப்பட்டது.

நூற்புழுத்துறை தலைவர் முனைவர் ச. சுப்ரமணியன் அவர்கள் நூற்புழுக்களால் பயிர்களில் ஏற்படும் மகசூல் இழப்பைப் பற்றி எடுத்துரைத்தார்.

இறுதியாக முனைவர். இராமன் குமார் வாலியா அவர்கள் தமது தலைமையுரையில் பழங்குடி விவசாயிகளுக்கான இந்த திட்டத்தை முழுமையாகப் பயன்படுத்தி பயிர்களை நூற்புழு பாதிப்பில் இருந்து காத்து வாழ்வாதாரத்தை பெருக்க வேண்டியதன் அவசியத்தை எடுத்துரைத்து, அதற்கான இடு பொருட்களையும் வழங்கினார்.

மக்கள் தொடர்பு அலுவலர்